




- வாழ்வோம்

‘நீதி கேட்டு நெடிய பயணம்’ தொடக்கம்!


ஓவியம் : ரவி பேலட்

1981-ஆம் ஆண்டு, கழகத்தின் அரசியல் வரலாற்றில், கலைஞரின் போராட்ட வரலாற்றில் முக்கியமான ஆண்டு. எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசியல் களம் அவரைச் சுற்றித்தான் இயங்கியது என்பதற்கு சாட்சியம் கூறும் நிகழ்வுகளில் ஒன்று, திருச்செந்தூர் கோயில் அறநிலையத் துறை அதிகாரி கொலை வழக்கு. அதற்கு நீதி கேட்டு, கலைஞர் நடத்திய போராட்டம்.

‘அடக்குமுறை அராஜகங்கள்’, ‘நிர்வாக ஊழல்கள்’, ‘விலைவாசி உயர்வு’, ‘ஈழத்தமிழர் பிரச்சினை’, ‘ஆசிரியர் பிரச்சினை’, ‘மீனவர் பிரச்சினை’, ‘தொழிலாளர் பிரச்சினை’ போன்றவைகளுக்காகப் பல முறை அறப்போராட்டங்களிலே ஈடுபட்டு சிறைக்குச் சென்றதோடு, அரசின் பல்வேறு வழக்குகளையும் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளிலே ஏறிச் சந்திக்கவும் பின்வாங்கிட வில்லை என அந்த நாட்களைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

திருச்செந்தூர் சம்பவம்!

1980-ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று, திருச்செந்தூர் கோயில் வளாக விடுதியில், அறநிலையத் துறையின் உதவி ஆணையாளர் சுப்ரமணிய பிள்ளை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த அறங்காவலர்களால் படுகொலை செய்யப்பட்டு, அதற்குத் தற்கொலை என்று பெயர் சூட்டி, மறைத்திட முயன்றனர். இந்தச் செய்தி வெளியாகி, 2.12.80 அன்று திருச்செந்தூர் நகரத்தில், அனைத்துக் கட்சிகள் சார்பில், ஒட்டுமொத்தமாகக் கடையடைப்புப் போராட்டம் நடைபெற்றது. அதன் பின்னரே, இந்த உண்மையை உலகம் அறியத் தொடங்கியது.

கோயில் உண்டியல் முறைகேடுகள் தொடர்பாக அவர் புகார் அளித்ததையடுத்து, மர்மமான முறையில் இறந்திருந்தார். இந்த நிகழ்வு, தமிழ்நாட்டில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நிலையில், இந்தச் சம்பவத்தை விசாரிக்க எம்.ஜி.ஆர். அரசு, நீதிபதி சி.ஜே.ஆர்.பால் தலைமையில் விசாரணை ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையம் சுப்பிரமணிய பிள்ளை மரணம் குறித்து விரிவான விசாரணை நடத்தி, 288 பக்கங்கள் கொண்ட தனது ரகசிய இறுதி அறிக்கையை, 1981 -ஆம் ஆண்டு அக்டோபரில் அரசிடம் வழங்கியது. ஆனால், அந்த அறிக்கையின்படி, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நீதிபதி சி.ஜே.ஆர்.பால், அரசுக்குக் கொடுத்த அறிக்கை அவர்களுக்குச் சாதகமாக இல்லை என்பதால், அதனை வெளியிடவில்லை என்பதுடன், ‘குற்றவாளிகள் யார் என்று தெரியவில்லை. ஆணையம் யாரையும் அடையாளம் காட்டவில்லை. குற்றவாளிகள் என்று கருணாநிதி யாரைப் பிடிக்கச் சொல்கிறார், அவருக்குத் தைரியம் இருந்தால், குற்றவாளிகள் பெயரைச் சொல்லட்டும்’ என எம்.ஜி.ஆரும் அவரது அமைச்சர்களும் பேசிவந்தனர். அப்படியான நிலையில்தான், நீதிபதி பால் ஆணையத்தின் ரகசிய அறிக்கையின் நகல், கலைஞருக்குக் கிடைத்தது. அதை, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் பத்திரிகைகளில் வெளியிட்டு, அதிர்ச்சி ஏற்படுத்தினார் கலைஞர்.

80

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

நீதிபதி பால் அறிக்கை

‘சுப்பிரமணிய பிள்ளை கோயிலுக்கு வந்து சேர்வதற்கு முன்பே, உண்டியல்கள் திறக்கப்பட்டுவிட்டன. அது கண்ட சுப்பிரமணிய பிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் கலந்துகொள்ளாமல், அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்போவதாகச் சொல்லிவிட்டு, ஆய்வகம் சென்றுவிட்டார். அதன்பேரில் அவர் தாக்கப்பட்டு, அவருக்குக் காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர்விழந்தார். அவரது குரல்வளையை நெரிப்பதற்கான ஒரு முயற்சிகூட செய்யப்பட்டிருக்கலாம். அவர், தற்கொலை செய்துகொண்டார் என்று தோன்றுமாறு செய்ய, அவர் மின்விசிறியில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால், மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக, அவர் தனது மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன’.

குற்றவாளிகள் யார் என்பது குறித்து, ‘பால் கமிஷன் அறிக்கை’ இப்படி விரிவாகப் பேசி இருந்தது. குறிப்பாக, அந்த அதிகாரியை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை என்று குற்றம் சாட்டியது. ‘சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதல் உதவி அளிக்கவோ, அவருக்கு மூச்சு வரச் செய்யவோ, சிகிச்சை அளிக்கவோ முன் வரவில்லை. ஏனென்றால், அவருக்கு மூச்சு வந்து உணர்வு பெற்றால், அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக்கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர்’ என நீதிபதி பால் குறிப்பிடுகிறார்.

‘அவர்களுக்கு’ எதிராக மரண வாக்குமூலம் தரக்கூடும் என்று பால் குறிப்பிடுகையில், “அந்த அவர்கள் யார்?” என்பதையும் பால் தன்னுடைய அறிக்கையின் 44-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார். அப்போது, அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் டாக்டர்.பாலகிருஷ்ணன், சீனிவாசப் பாண்டியன், கோயில் சூப்பிரன்டென்டென்ட் மகாதேவன், நிர்வாக அதிகாரி பிரசாத், கேசவ ஆதித்தன் எம்.எல்.ஏ., ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்றும் நீதிபதி பால் குறிப்பிட்டுள்ளார்.

1981-ஆம் ஆண்டு நவம்பர் 24 அன்று, கலைஞர் அந்த அறிக்கையைப் பொது வெளிக்குக் கொண்டுவந்து விரிவாகப் பேசியதும், காட்சிகள் மாறத் தொடங்கின. எம்.ஜி.ஆர். அரசு நெருக்கடியைச் சந்திக்கத் தொடங்கிய அதே நேரத்தில், குற்றம் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முன்வராத அ.தி.மு.க. அரசு, அந்த அறிக்கையை வெளியிட்ட காரணத்தினால், கலைஞர் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. குறிப்பாக, அந்த விசாரணை அறிக்கை எப்படி கலைஞருக்குக் கிடைத்திருக்கும் என ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதல், ‘முரசொலி’ ஆசிரியராக இருந்த ‘முரசொலி’ செல்வம், கலைஞரின் உதவியாளராக இருந்த சண்முகநாதன் உள்ளிட்டோர் வரை கைதுசெய்தது.

ஒரு துயர நிகழ்வுக்கு நீதி கேட்டு விசாரணை ஆணையத்தின் அறிக்கையை வெளியிட்ட பின்னர், எதிர்கொண்ட சட்டப் போராட்டமும், நீதி கேட்டு திருச்செந்தூர் சென்ற நடைப்பயணமும் விரிவாகப் பேசவேண்டியவை...

...தொடரும்

தமிழ்.கா.அமுதரசன்

பள்ளிக்கூட வகுப்பறையில் சாதிய வசைபாடல்களால் மனம் நொந்து, கோவையில் 11-ஆம் வகுப்பு மாணவர் அகிலன், தற்கொலை செய்துகொண்டு ஒரு வாரம் ஆகிறது. குடும்பத்தினரும், பல்வேறு இயக்கங்களும் தொடர்ச்சியாகப் போராடிய பின்னர்தான், சிலரைக் கைதுசெய்ய இந்த அரசு முன்வந்தது. ஆனால், தலைமை ஆசிரியரையோ அல்லது அந்த மாணவரின் வகுப்பு ஆசிரியரையோ இன்னும் இந்த அரசு கைதுசெய்யவில்லை. வார்த்தைக்கு வார்த்தை `8 தலித் அமைச்சர்கள் தந்திருக்கிறோம்' என விளம்பரப்படுத்திக்கொள்ளும் இந்த ஆட்சியில், அகிலன் குடும்பத்தாரிடம் தொலைபேசியில்கூட ஆறுதல் சொல்ல, இந்த முதலமைச்சர் தயாராக இல்லை.

8 தலித் அமைச்சர்களால் என்ன பயன்?

த.வெ.க. அரசின் இந்த மோசமான அலட்சியப்போக்கு தொடர்பாகப் பதிவிட்டுள்ள எழுத்தாளர் வாலாசா வல்லவன், ``த.வெ.க. அரசில் எட்டு பட்டியல் வகுப்பினருக்கு அமைச்சர் பதவி கொடுத்துள்ளதாகப் பீற்றிக்கொள்கிறார்கள். கோவையில் கே.கே.நாயுடு பள்ளி ஆசிரியரின் ஆதிக்க சாதி வெறியால், சாதிரீதியாக இழிவுபடுத்தப்பட்டதால், தற்கொலை செய்துகொண்ட பட்டியல் வகுப்பு மாணவன் அகிலன் மறைவுக்கு, நீதிகேட்டு ஆசிரியரையும் தலைமை ஆசிரியரையும் கைதுசெய்ய வலியுறுத்தி, முற்போக்கு இயக்கங்கள் போராட்டம் நடத்திவருகின்றன. இதுவரை த.வெ.க. அரசு அவர்களைக் கைதுசெய்ய முன்வரவில்லை.

வன்னி அரசு, சமூக நீதி அமைச்சராக இருந்து என்ன பயன்? 1938-இல் எம்.சி.ராசா சட்டமன்றத்தில் கொண்டுவந்த ஆலய நுழைவுத் தீர்மானத்தைப் பட்டியல் வகுப்பு அமைச்சர் வி.ஐ.முனிசாமி பிள்ளையை அருகில் வைத்துக்கொண்டே தோற்கடித்தார், அன்றைய முதலமைச்சர் இராசாசி என்பதுதான் நினைவுக்கு வருகிறது. இத்தனைக்கும் எம்.சி.ராசா, காங்கிரஸ் ஆதரவாளராக அப்போது இருந்தார்" என்று பதிவிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்





சி.கோபி

மாநாட்டு நினைவுச் சுடர்!

2018-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24, 25 ஆகிய தேதிகளில், ஈரோடு மண்டல மாநாடு நடைபெற்றது. அதற்காக, கே.வி.குப்பத்தில் இருந்து அன்னை மணியம்மையார் மற்றும் எங்கள் ஒன்றியத்தின் முதல் ஒன்றியக் கழகச் செயலாளர் அய்யா, துரை சாம்பசிவம் அவர்கள் பெயரிலான நினைவுத் தீச்சுடரை, என் தலைமையில் ஏந்திச்சென்றோம். 23-ஆம் தேதி காலை, கே.வி.குப்பம் அண்ணா சிலையில் தொடங்கிய ஓட்டம், மறுநாள் காலை 11 மணியளவில் மாநாட்டு மேடையை அடைந்து, அன்றைய கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்கள் முன்னிலையில், மாநாட்டுத் தலைவர் - அன்றைய செயல் தலைவர் - தளபதி அவர்கள் கரத்தில் தீச்சுடரை ஒப்படைத்தேன். அப்போது, மண்ணின் மைந்தர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் எங்களை உற்சாகப்படுத்தினார்.

- சி.கோபி, மாநிலத் துணைச் செயலாளர், கழகக் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, நிறுவனர், முரசொலி தமிழ் மன்றம், கே.வி.குப்பம், வேலூர் மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1985

கழக சட்டப்பேரவைக் கழக அலுவலகம்!

-ஆம் ஆண்டு மே 8-ஆம் தேதி, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த சட்டப்பேரவைக் கழக அலுவலகத்தைக் காலிசெய்து வெளியேறுமாறு, அன்றைய அ.தி.மு.க. அரசு அழுத்தம் கொடுத்தது. `சனநாயகத்துக்கு எதிரான இந்த நடவடிக்கையை ஏற்க முடியாது' என சட்டப்பேரவைச் செயலருக்குக் கழகம் பதிலளித்தது. மே 31-ஆம் தேதி, சட்டப்பேரவைக் கழக அலுவலகத்தில் இருந்த கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட தலைவர்களைக் கைதுசெய்ததுடன், அலுவலகத்தை மூடி, சீல் வைத்தது. இந்த நிகழ்ச்சியின் விளைவாக, உடனடியாக `அண்ணா அறிவாலயம்' கட்டும் பணிகளைத் தொடங்கினார் கலைஞர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900